


**ISSN Print:** 2394-7500
**ISSN Online:** 2394-5869
**Impact Factor:** 5.2
IJAR 2019; 5(5): 261-266
www.allresearchjournal.com
Received: 28-03-2019
Accepted: 30-04-2019

**Dr. DA Sirisha**
Assistant Professor,
Department of Tamil,
Chellammal Women's College,
Hindi, Chennai, Tamil Nadu,
India

**Correspondence**
**Dr. DA Sirisha**
Assistant Professor,
Department of Tamil,
Chellammal Women's College,
Hindi, Chennai, Tamil Nadu,
India

# தானாய் எல்லாம் மாறும் என்பது பழைய பொய்யடா - பட்டுக்கோட்டையின் பாட்டுப்பயணம் - மு.சுதந்திரமுத்துவின் விமர்சனநூல் பற்றிய ஒரு மதிப்பீடு

**Dr. DA Sirisha**

விடுதலை உணர்வு எனில் பாரதி நினைவிற்கு வருவதுபோல், மொழி உணர்வு எனில் பாரதிதாசன் நினைவுக்கு வருவதுபோல், மக்கள் உயர்வு எனில் நினைவிற்கு வரும் பெயர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம். பட்டுக்கோட்டையார் ஒரு பாட்டுச் சகாப்தம்; புரட்சிக்கனலை மக்கள் உள்ளங்களில் எரியவிட்டவர்; எளிய கவிதைகளால் இன்றும் நிலைபெற்றிருப்பவர். இப்படிப்பட்ட எழுச்சிக் கவிஞரைப் பற்றிப் பேராசிரியர் மு.சுதந்திரமுத்து, தானாய் எல்லாம் மாறும் என்பது பழைய பொய்யடா' என்ற தலைப்பில் எழுதியுள்ள நூலின் ஆய்வுச்சுருக்கமும் மதிப்பீடுமே இக்கட்டுரையாகும்.

## திரைத்தமிழ்

ஊடகப்பரப்பு மிகப்பரந்தும் விரிந்துமுள்ளது. இன்றைய சமூக அமைப்பு என்பது, ஓர் அரசியல் மற்றும் பொருளியல் வலைப்பின்னலாகவும் மாறியிருக்கிறது. ஊடகம், கருத்துகளையும் அனுபவங்களையும் பொதுமக்களிடம் எடுத்துச்சென்று சேர்ப்பதோடு, அவற்றின் சந்தைப்படுத்தலுக்கும் உதவுகிறது. இங்குப் பொதுமக்கள் நுகர்வோராகத் திசைமாற்றப்படுகின்றனர்.பெரும்பாலான நிகழ்வுகள் வீண்கேளிக்கை நோக்குடனேயே உருவாக்கப்படுகின்றன. குழந்தைகள் பெற்றோரிடம் கற்கவேண்டியதை ஊடகங்களின் மூலமே இன்று கற்றுக்கொள்கிறார்கள். வானொலியும் தொலைக்காட்சியும், அரசின் கட்டமைப்பிலும் தேர்விலும் மட்டுமல்லாது, தனியாரின் முதலீட்டிலும் இயங்குபவை. திரைத்துறையும் இதழியலும் பெரும்பாலும் தனியார் முதலீட்டிலேயே இயங்குபவை. இந்த ஊடகங்களின் மொழிநடை என்பது, இப்போது எல்லாவற்றையும் வெட்ட வெளிச்சமாக அதாவது வெளிப்படையாகத் தெரிவிப்பதை விரும்பும் சுவைஞர்களை

வளர்த்துள்ளது. கேட்டதையே கேட்பது என்பது அனைவருக்கும் எளிதாக இருப்பதால், ஊடகங்களும் சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டிருக்கின்றன. நம் ஊடகத்துக்கான மொழிக்கோட்பாடுகளும் இவ்வாறான மீளமீளக் கூறுவதிலிருந்தே உருவாகின்றன என்கிறார் முனைவர் மு. சுதந்திரமுத்து.

வெகுசன ஊடகமாகக் கருதப்படும் திரைப்படத்திற்கான தமிழ்நடை நாடகத்தில் இருந்து எடுத்ததுதான். நாடகங்களும் மறைந்துகொண்டிருந்த உள்நாட்டுக்கலையான நாட்டுப்புறப்பாடல்கள், கதைப்பாடல்கள், கோயில்கலைகள், நிகழ்த்துக்கலைகள் ஆகிய பிறவற்றிலிருந்தே பெறப்பட்டதாகும். இதன் காரணமாகத்தான், மிகைப்பட்ட நடிப்பும் நமது அழகியலானது என்கிறார். அன்றைய சூழலில் பாரதி கூறியதுபோல், பாட்டுகள் எழுத விரும்பியவர்கள், எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்துகொள்ளக் கூடிய சந்தம், பொதுசனங்கள் விரும்பும் மெட்டில் எழுதும் நாட்டமுள்ளவர்களாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தார்கள். நாட்டுப்பற்றாளர்களும் தம் கருத்தியலைப் பரப்பும் ஒரு கருவியாகத் தமிழ் நாடகங்களைப் பயன்படுத்தத் தொடங்கினர். இவை பெண் விடுதலை, காந்தியச் சீர்திருத்தக் கருத்துகளைப் புலப்படுத்தின. இந்நாடகங்களிலும் பாடல்களின் பங்கு குறிப்பிடத்தக்கதாயிருந்தது. அரசியல் சார்ந்த அடக்குமுறைகள் நேரடியாகவும்,உருவகமாகவும் பாடற்கருத்துகளில் கூறப்பட்டன. இவ்விதமாக, அன்று நாடகங்கள் சமூகச் செயற்பாட்டைச் செம்மையாகச் செய்தன எனப் பட்டுக்கோட்டை பாட்டுலகிற்குள் புகுவதற்கு முன்னிருந்த சூழலைப் பேராசிரியர் விளக்குகிறார்.

நடராச முதலியார், 1916இல் கீசகவதம்' என்ற பேசாப்படத்தை எடுத்துத் தமிழ்த் திரைவரலாற்றைத் தொடங்கிவைத்தார். மக்கள் நன்கறிந்த புராணக்கதைகளே, அன்று படமாக்கப்பட்டன. இப்பேசாப்படங்களின் வரலாற்றின் இறுதிக்காலத்தில்தான், சமூகப் படங்கள் எடுக்கப்பட்டன. 1931இல் குறத்திப்பாடல் மற்றும் நடனம் பற்றிய ஒரு படம், நான்கு சுருள்களாகப் பாடலுடன் வெளிவந்தது. தமிழ், தெலுங்கு ஆகிய இரண்டு மொழிகளிலும் காளிதாஸ்' வெளிவந்தபோது, நாட்டுணர்வு மொழிவழிப் பீறிட்டது. 1937இல் ராஜாஜியின் அமைச்சரவை அமைந்தபோது,திரைப்படங்கள் வெளிப்படையாக அரசியலைப் பேசின. நாடக மரபை விட்டுவிடாத தமிழ்த் திரைப்படம், பேச்சுத் தமிழையும் பார்ப்பனத் தமிழையும் வடமொழி கலந்த தமிழையும் வேறுபடுத்தாமல் பயன்படுத்தியது. அப்போதைய திரைப்படங்களில், பெரும்பாலும் கருத்துப்பரப்பலுக்கே முதலிடம் தரப்பட்டது. மொழி பற்றிய கவனத்திற்கு இரண்டாமிடமே தரப்பட்டது. 1936இல் பாரதிதாசன், தமிழ்ப் படங்களின் நிலையைக் கவிதையில் படம்பிடித்தார்.

இதற்கு அடுத்த கட்டத்தில் அண்ணா, கலைஞர் முதலானோர் கதை வசனம் எழுத முன்வந்தனர். என்.எஸ்.கிருஷ்ணன் பகுத்தறிவையும், தேசிய உணர்வையும் வளர்த்தார். தி.மு.க.வின் அரசியல் வெற்றிக்குப் பிறகு திரைப்படம் என்ற ஊடகம் வணிக முதலீடாகப் பார்க்கப்பட்டது. இதன் விளைவாகப் பலவகைப்பட்ட படங்களும் எடுக்கப்பட்டன. ஊடகங்கள் கருத்தியலை உருவாக்கும் பேராற்றல் கொண்டவை என்பதை இந்தியத் தேசியத் தமிழ்த் தேசியத் திரைப்படங்கள் மூலம் நாம் நன்கு அறிந்திருக்கிறோம். இந்தத் திரைப்படங்களால் உருவான ஒரு சமூக மனப்பான்மை, நடிகனையே தனக்குரிய முன்மாதிரியாகக் கொள்ளத் தூண்டுகிறது. கொச்சையான பக்தி, பெண்களைப் பெரிதும் இழிவுபடுத்தும் பாடல்கள், முத்தக் காட்சிகளைவிடப் படுமோசமான கனவுக் காட்சிகள் என்று இன்று வணிகமயப்பட்டுள்ள திரை உலகமே,

ஊடகங்களுக்கான கச்சாப்பொருளாகியிருக்கிறது. ஊடகங்கள் தாம் தரும் செய்தியைப் பிற மொழிக் கலப்பில்லாத செம்மையான தமிழில் தரவேண்டும். ஆனால் இவ்வாறு இங்கு நடப்பதில்லை. இப்படிப்பட்ட ஒரு நுகர்வு வரலாற்றைக் கொண்ட திரைப்படத் துறையில், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், தம் பாடல்கள் மூலம் ஆற்றிய சமூகப் பணிகள் ஆறுதலளிப்பதாக மட்டுமின்றி வழிகாட்டுவதாகவும் உள்ளதாகக் கூறுகிறார்.

**திரைக்கவிஞர்**

திரைத்துறையில் தமிழகம் எப்போதும் முன்னணியில் இருக்கிறது. ஓர் ஆண்டில் 500 முதல் 600 படங்கள் தென்னகத்தில் தயாரிக்கப்படுகின்றன. 1931ஆம் ஆண்டில் முதல் பேசும் படம் 'ஆலம் ஆரா' வந்தவுடன், அதே ஆண்டில், இங்குக் 'காளிதாஸ்' படமும் தயாரிக்கப்பட்டுவிட்டது. நாடகத்தில் பாடல்கள் எழுதிய பாஸ்கர தாஸ், லட்சுமண தாஸ், உடுமலை நாராயண கவி, தஞ்சை ராமையா தாஸ், கொத்த மங்கலம் சுப்பு முதலானவர்கள் திரைப்படத்திற்கும் பாடல் எழுதினார்கள். பாபநாசம் சிவன்,தாமே மெட்டமைத்துப் பாடல்கள் எழுதினார். அவரது பாடல்களில் வடமொழிச் சொற்கள் மிகுதியாக இருந்தன. திராவிட இயக்கத்தினர் முழுமூச்சாகத் திரைத் துறையில் பிரச்சாரத்தை முன்வைத்தார்கள். அண்ணா, கலைஞர் முதலானோருடன் பிறரும் வசனம், பாடல்கள், கதை மூலம் பிரச்சாரம் செய்தனர். சமுதாயச் சீர் கேடுகளுக்குப் பொருளாதார அமைப்பே காரணம் என்பதைக் கூறாமல், சமயத் தலைவர்களும் திமிர் பிடித்த பணக்காரர்களும் போலிச் சாமியார்களுமே காரணம் என்று இப்படங்கள் சுட்டின. பாரதி, பாரதிதாசன், நாமக்கலார், கவிமணி முதலானோர் எழுதியிருந்த கவிதைகளும் திரைப்படத்தில் இசையமைக்கப்பட்டுப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டன.

இத்தகைய சூழலில்தான், திரைப்படப்பாடல்களுக்குள் பட்டுக்கோட்டையார் வந்தார். 23 வயதில் நுழைந்து, 1954ஆம் ஆண்டு முதல் 1959ஆம் ஆண்டு வரை, 6 ஆண்டுகள் திரையுலகில் பாடல்கள் எழுதித் தம் 29ஆம் வயதில் மறைந்தார். கல்யாணசுந்தரம், ஏறத்தாழ 59 படங்களில், 205 பாடல்களை எழுதியிருக்கிறார். இளம்வயதில் சீர்திருத்த இயக்கம், பொதுவுடைமை இயக்கம் ஆகிய இரண்டிலுமே தொடர்பும் அனுபவமும் கொண்டிருந்தார். விவசாயச் சங்க அனுபவம், அவரை ஒரு கிராமியப் பாடகனாகவே ஆக்கியிருந்தது. திரைப்பாடலுக்கும் தனியே எழுதப்படும் கவிதைக்கும் வேறுபாடு உண்டு. நீண்ட மக்கள் மேடை அனுபவத்தின் காரணமாக அவர், இவ்வேறுபாட்டைத் தெளிவாக அறிந்திருந்தார். மெட்டுகளுக்குப் பாட்டுகள் எழுதுவதிலுள்ள சிக்கலையும் உணர்ந்திருந்தார். இன்றைக்கு என்ன தேவை, இனி வரும் காலத்திற்கு என்ன தேவை என்றெல்லாம் அவர் சிந்தித்திருக்கிறார்.ஆனால், அவர் எண்ணியதை எல்லாம்,திரைத் துறையில் அவரால் முழுமையாகச் சொல்லிவிட முடியவில்லை. என்றாலும்கூடப் பல வகைப்பட்ட உழைப்பாளர்கள் பாடுவதாகத் திரைப்பாடல்களை எழுதியிருக்கிறார். இவர் பாடல்கள் கூறும் மையக்கருத்தைப் பின்வருமாறு தொகுத்துக்கொள்ளலாம்.

1. முதலாளித்துவச்சமுதாயம் நன்மை தராது என்ற உணர்வை ஏற்படுத்துதல்
2. இந்தச் சமூக அமைப்பு மாற்றப்படவேண்டியது என்பதை உணர்த்துதல்
3. இது மாற்றப்படக்கூடியதுதான் என்ற நம்பிக்கையை ஊட்டுதல்

"உனக்கும் கீழே உள்ளவர் கோடி
நினைத்துப் பார்த்து நிம்மதி நாடு"

எனக் கண்ணதாசன்போல் பட்டுக்கோட்டையார், இருப்பதைக் கொண்டு

நிறைவுபெறச் சொல்லிப் பொதுமக்களைச் சோம்பியிருக்கச் சொல்லவில்லை.

"ஏமாத்தும் போர்வையிலே
எக்காளம் போடுகிற கூட்டம் - மக்கள்

எதிர்த்துக் கிட்டா எடுக்கணம் ஓட்டம்"

எனச் சீறியெழச் செய்து, வாழ்க்கைப் போராட்டத்தில் தொடர்ந்து போராடும் மனத் திண்மையைப் பொதுமக்களிடம் வளர்த்தார்.

"நெஞ்சினைப் பிளந்த போதும்
நீதி கேட்க அஞ்சிடோம்"

என நேரடியாகச் சாடுகிறார். பட்டுக்கோட்டையின் பாடல்களிலெல்லாம், எளிமைதான் வடிவமாக இருக்கிறது. இவரின் பாடல்களில் பிரச்சாரத்தின் நெடி' இருக்கிறதென்றும், அவை வெறும் கம்யூனிசக் கட்டுரைகள்தாம் என்றும் நா.காமராசன் வெறுக்கிறார். ஆனால், இது சரியான மதிப்பீடாகத் தெரியவில்லை. காதல் பாடல்களில் கண்ணியம், சமூகப் பாடல்களில் புரட்சி, பக்திப் பாடல்களில் பகுத்தறிவு என்று தமக்குக் கிடைத்த வாய்ப்பில் தமிழுக்கும் தமிழருக்கும் தொண்டு செய்தவர் பட்டுக்கோட்டையார் எனும் பேராசிரியர் கருத்தோடு நாமும் முழுமையாக உடன்படலாம்.

## இயல்புக்கவிஞர்

பட்டுக்கோட்டையாரின் பாடல்கள், திரைப்படங்களில் அப்படியே மாற்றமின்றிப் பயன்படுத்தப்பட்டன. ஜனசக்தி பத்திரிகையில் எழுதிய பாடல்களையும்கூடத் திரைப் படங்களில் அப்படியேதான் பயன்படுத்தினர். காடு வெளஞ்சென்ன மச்சான்' என்ற அப்பாடலைப் பயன்படுத்துவதற்காகவே, நாடோடி மன்னன் படத்தில் புதியதாக ஒரு காட்சியைத் தொடர்பில்லாமல் எம்.ஜி.ஆர். அமைத்தார். தமக்கு நன்றாகத் தெரிந்த, நெருக்கமாகப் பழகிய தம் தோழர்களின் நடைமுறைகளை ஆதாரமாக வைத்தே, தம் கவிதைகளைப் பட்டுக்கோட்டையார் எழுதினார். மரத்தடிகளையே வீடாகக் கொண்டு வாழும் மக்களைப் பற்றியே அதிகமாகப் பாடல்களை எழுதினார். சக்தி நாடகசபாவில் கவிஞர் எஸ்.டி.சுந்தரத்தின் 'கவியின் கனவு' நாடகத்தில், கல்யாணசுந்தரம் நன்றாக நடித்தார்.அதனால் ராஜகுரு சுந்தரம் என்றழைக்கப்பட்டார். புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசனிடம் இவர் பெரும் ஈடுபாடு கொண்டிருந்தார். 1957ஆம் ஆண்டுத் தேர்தலில், பொதுவுடைமைக் கட்சித்தலைவர்கள் தோற்றபோது, தூங்காதே தம்பி, தூங்காதே!' எனப் பாடலெழுதிச் சோர்ந்துபோனவர்களைத் தட்டியெழுப்பினார்.

"போனா எவனும் வரமாட்டான் - மேலப்
போனா எவனும் வரமாட்டான் - இதப்
புரிஞ்சுக்கிட்டவன் அழமாட்டான்"

என்றெழுதிய பாடல்தான், பட்டுக்கோட்டையாரின் இறுதிப் பாடலாகும். மரணத்துக்கு அவர் அஞ்சியதில்லை; அதனால்தான் தம் மரணத்தையும் காலத்தால் அழியாத் தம் பாடல்களால் அவர் வென்றுவிட்டார் போலும்!

## இயக்கக்கவிஞர்

திரைப்படத்துக்காகப் பாட்டெழுதியபோதும் அரசியல், பாட்டாளி உரிமைகள், பகுத்தறிவு, புரட்சி, நடைமுறைத் தத்துவம் போன்றவற்றின் குரலே இவருடைய பாடல்களில் அழுத்தமாக ஒலிப்பதைக் கேட்கிறோம். திராவிட இயக்கத்தார் பால்ய விவாக எதிர்ப்பு, மூடநம்பிக்கைக்குக் கண்டனம், மதங்களைச் சாடுதல், விதவைத் திருமணம், சாதி ஒழிப்பு, காதலுக்கு ஆதரவு போன்ற உள்ளடக்கங்களை வைத்துப் பிரச்சாரம் செய்தார்கள். எம்.ஜி.ஆர். நடித்த பல படங்களுக்குப் பட்டுக்கோட்டையே பாடல்களை எழுதினார். இவை பின்னாளில் எம்.ஜி.ஆர். அ.தி.மு.க.வைத் தொடங்கிய போது, அடக்குமுறைக்கு எதிராக எழுதப்பட்ட பாடல்களாகப் பட்டிதொட்டிகள் எங்கும் இசைக்கப்பட்டுப்

பெருஞ்செல்வாக்கை எம்.ஜி.ஆருக்கு உருவாக்கின. தான் பிறந்த சமூகத்தில் நிலவிவரும் மூட நம்பிக்கைகளையும் ஆசார அனுஷ்டானங்களையும் கிண்டல் செய்து பல பாடல்களைத் தம் நண்பர்களிடமும் உறவினர்களிடமும் பாடிக் காட்டும் பழக்கமுடைய இக்கவிஞர், பேய் மறுப்பு, பகுத்தறிவு, விதி எதிர்ப்பு போன்ற மூட நம்பிக்கைகளைக் கடுமையாக எதிர்த்துப் பாடியிருக்கிறார். வேப்ப மர உச்சியில் நின்னு பேயொன்னு ஆடுதுன்னு சொன்னாங்க…' போன்ற பாடல்களின் வாயிலாகப் பொதுமக்களிடம் விழிப்புணர்வை இவர் ஏற்படுத்தினார். 1948ஆம் ஆண்டு, உலகில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. பல போராட்டங்கள் நடந்தன. காங்கிரஸ் மக்களின் போராட்டத்தைக் கடுமையாக அடக்கியது. மணலி கந்தசாமியின் தலைக்கு ரூ. 5000 பரிசு அறிவிக்கப்பட்டது. காட்டிக்கொடுக்க மறுத்த சிவராமன் என்ற இளைஞன் கொல்லப்பட்டான். அவரோடிருந்த இரணியன் என்ற இளைஞருக்கும் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்திற்கும் நெருங்கிய தொடர்பிருந்தது. கல்யாணசுந்தரம் இரணியனுக்கு இரவில் உணவெடுத்துச் செல்வார். 'ஏழைகளுக்காகவும் தொழிலாளர்களுக்காகவும் எழுதினாங்க. கட்சியோடு தொடர்பிருந்தது. அதிகமாகக் கம்யூனிஸ்டு கட்சியோட' என்று அவரது மனைவி ஒரு பேட்டியில் குறிப்பிட்டுள்ளார். விவசாயச்சங்கம் அவரது அடிப்படையாகும். மக்கள் கவிஞர் என்ற சிறந்த பட்டத்தை, இவருக்குக் கோவைத் தொழிலாளர்கள் வழங்கியிருக்கிறார்கள்.பட்டுக்கோட்டையார், கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினராக இல்லாமல்,ஓர் அனுதாபியாயிருந்து, பொதுவுடைமைக் கருத்துக்களைப் பாடல்களாக எழுதியிருக்கிறார். அவருக்குதவியாகப் பொதுவுடைமை இயக்கத்தாரும் இருந்திருக்கிறார்கள் எனப் பேராசிரியர் கண்டுகாட்டியுள்ளார்.

**மக்கள் கவிஞர்**

பட்டுக்கோட்டையார் இயக்கத்திலே உறுப்பினராக இருந்ததில்லை; அவருடைய கவிதைகளும் மார்க்சியக் கோட்பாட்டுக்குள் அடங்குவதாயில்லை என மார்க்சியர்கள் தெரிவிக்கின்றனர். சந்தர்ப்பச் சூழ்நிலைகள் காரணமாகக் கொஞ்சம் விலகியும் அவர் எழுதநேர்ந்தது எனச் சமாதானமும் கூறுகிறார்கள். தமிழகத்திலே ஒரு சிறந்த திரைக் கவிஞராகப் பட்டுக்கோட்டையைக் காட்டுவதற்குப் பொதுவுடைமை இயக்கம் துணை நின்றிருக்கிறது.அது மிக முக்கியமானது என்ற பேராசிரியர் கருத்து ஏற்கத்தக்கதாகும். மக்களைப் பற்றி மக்களைப் போலவே கவிஞர் சிந்தித்தார் என்பதும், மக்களைப் போலவே துயரம் கொண்டார் என்பதுமே அவரை மக்கள் கவிஞர் ஆக்கியிருக்கிறது. அனைவரும் சமம் என்பதுதான் பட்டுக்கோட்டையாரின் அசையாத நம்பிக்கையாகும். சோம்பேறியாக இருப்பதை அவர் வெறுத்தார். நம் குழந்தைகளைச் சீராக வளர்ப்பதன் வாயிலாகச் சமுதாயத்தை மேம்பட்டதாகச் செய்யமுடியும் என்ற கருத்தில் அவருக்கு உறுதியிருந்தது. இளம்பிஞ்சுள்ளங்களை மையப்படுத்திக் கவிஞர் அறிவுரைகள் பல கூறுகிறார். நெறி தவறக்கூடாது என்றும், நல்லவர்கள் தூற்றும்படி வாழக்கூடாது என்றும், மூத்தோர் சொல் மீறக்கூடாது என்றும், பண்புமுறைகளில் மாறக்கூடாது என்றும், பண்புக்கேடாகப் பேசக்கூடாது' என்றும் அவர் வலியுறுத்தக் காண்கிறோம்.

பாரதி பரம்பரையின் பரிமாணங்களை உள்ளடக்கி, உண்மையே அழகு' என்ற மகா வாக்கியத்துக்கு உரைகல்லாகத் திரையிலக்கியம் படைத்த இயக்கக்கவிஞர் எனப் பட்டுக்கோட்டையாரைப் புகழ்மொழிகளால் அடையாளப்படுத்துகிறார் முனைவர் மு. சுதந்திரமுத்து. "தான் வாழ்ந்த காலகட்டத்தையும், வரலாற்றுச் செல்நெறிகளையும், தான் பயன்படுத்த வேண்டியிருந்த வெளிப்பாட்டுச் சாதனங்களையும், உணர்வுப் பூர்வமாகவும் கருத்து ரீதியாகவும் கிரகித்துக்கொண்டது

மட்டுமின்றித் தான் வாழ்ந்த சமுதாயத்தில் கூர்மையடைந்து வந்த பல்வேறு முரண்பாடுகளைத் தெளிந்திருந்த தன்மையாலே பட்டுக்கோட்டையாரின் உள்நோக்கு, அறிவுக்கூர்மையும் கலை உணர்வும் ஒருங்கே வாய்க்கப்பெற்றதாய் அமைந்திருந்தது" எனக் கலாநிதி க.கைலாச பதி குறிப்பிடுவதைப் பட்டுக்கோட்டையார் பற்றிய பொருத்தமான ஒரு மதிப்பீடாகக் கருதலாம் என்கிறார் பேராசிரியர்.

இந்நூலின் சிறப்புகள் எவை? எளிய மொழிநடை, தெளிவான ஆழ்ந்த கருத்துகள், உரிய சான்றுகளின் அடிப்படையில் திட்டவட்டமாக முடிவுரைக்கும் ஆய்வுப் பாங்கு, விவாதக்கூர்மை, பல்கோணங்களையும் கணக்கிலெடுத்துக்கொள்ளும் ஆய்வு நேர்மை, பட்டுக்கோட்டைக்குப் பெருமைகூட்டும் நுட்பமான வாழ்க்கை வரலாற்றுத்தரவுகளைப் பயன்படுத்தியிருக்கும் புலமைத்திறம் என இந்நூல் சிறப்புகளைச் சொல்லிக்கொண்டே போகலாம். தரமான நூல்கள் மிகக்குறைந்துவரும் தமிழ் ஆய்வுலகிற்கு, இந்நூல் ஒரு கொடை எனில், அக்கூற்றுச் சிறிதும் மிகையில்லாத ஓர் உண்மையேயாகும்.

தானாய் எல்லாம் மாறும் என்பது பழைய பொய்யடா - பட்டுக்கோட்டையின் பாட்டுப் பயணம் - மு.சுதந்திரமுத்து (முதற்பதிப்பு: மார்ச் 2005, முரண்களரி பதிப்பகம், சென்னை).